

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.5.2023) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சென்னை, தியாகராய நகர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாம்பலம் இரயில் நிலைய நடைமேம்பாலத்திலிருந்து இரயில்வே மார்க்கெட் சாலை, மேட்லி சாலை வழியாக தியாகராய நகர் பேருந்து நிலையம் வரை 28 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நகரும் படிக்கட்டு மற்றும் மின் தூக்கிகளுடன் கூடிய ஆகாய நடைமேம்பாலத்தை மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று (17.05.2023) வேலூர் மாவட்டம், காட்பாடி ரங்காலயா திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன்,சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி. நந்தகுமார், திருமதி.அமலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, துணை மேயர் சுனில் குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### காஸ்ட்ரோ என்டாலஜிஸ்ட் - அப்பல்லோ மருத்துவமனை இணைந்து தயாரித்த

# பெருங்குடல் புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மே.18-

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2023) தலைமைச் செயலகத்தில், உலக காஸ்ட்ரோலஜி அமைப்பு (World Gastrology Organisation), தமிழ்நாடு காஸ்ட்ரோஎன்டாலஜிஸ்ட் டிரஸ்ட் (Tamil Nadu Gastroentrologist Trust) மற்றும் அப்பல்லோ மருத்துவமனை ஆகியவற்றின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள பெருங்குடல் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டார்.

இன்றைய நவீன வாழ்க்கை முறைகளால் உலகமெங்கும் பெருங்குடல் புற்றுநோய் ஏற்பட்டு வருகிறது. பெருங்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கும் வாழ்வியல் முறைகளான சரியான உடல் எடையை பராமரித்தல், முறையான தொடர் உடற்பயிற்சி,புகையிலை மற்றும் மது வகைகளை தவிர்த்தல், அதிக பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுதல், புற்றுநோய் முன்னெச்சரிக்கை பரிசோதனைகள் மேற்கொள்ளுதல் போன்றவை குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, அப்பல்லோ மருத்துவமனையின் மருத்துவப் பணிகள் இயக்குநர் மரு.வெங்கடாசலம், இரைப்பை குடல் நிபுணர் மற்றும் துறைத் தலைவர் மரு.கே.ஆர். பழனிசாமி, இரைப்பை குடல் மருத்துவ ஆலோசகர்கள் மரு.பி. பிரம்மநாயகம், மரு.கார்த்திக் நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த ஜுன் 3-ல்

# சத்துணவு மையங்களில் இனிப்பு பொங்கல் வழங்கப்படும்!

## சமூக நலத்துறை அறிவிப்பு!

சென்னை, மே 18-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜுன் 3-ல் சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு இனிப்பு பொங்கல் வழங்கப்படும் என்று சமூக நலத்துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து சமூக நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் அன்று இனிப்புப் பொங்கல் வழங்குதல் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதம் 17.04.2023 அன்று நடைபெற்றபொழுது, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள், சத்துணவுத் திட்டத்தில் பயனடைந்து வரும் மாணவ - மாணவியர்களுக்கு முன்னாள் முதலமைச்சர்களின் பிறந்த நாளன்று இனிப்புப் பொங்கல் வழங்கப்படுவதுபோல் இனி வரும் காலங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்றும் இனிப்புப் பொங்கல் வழங்கப்படும் என அறிவிப்பு செய்துள்ளார்.

சத்துணவு-குழந்தைகள் மையங்களில் பயனடைந்து வரும் மாணவ, மாணவியர்களுக்கு நாள்தோறும் சத்துணவிற்காக அனுமதிக்கப்பட்டுள்ள அரிசியின் அளவில் அரிசி பயன்படுத்தவும், இனிப்புப் பொங்கல் வழங்க தேவைப்படும் வெல்லம் மற்றும் இதர பொருட்களை இனிப்புப் பொங்கல் வழங்கப்படும் நாளின் உணவூட்டுச் செலவினத்திற்குள் (எரிபொருள் நீங்கலாக) வாங்குவதற்கு அனுமதி அளித்தும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான 03.06.2023 அன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சத்துணவு - குழந்தைகள் மையங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டிலுள்ள 43,094 சத்துணவு மையங்களின் மூலம் 44.72 இலட்சம் மாணவ-மாணவியர்களும் 54439 குழந்தைகள் மையங்களின் மூலம் 14.40 இலட்சம் குழந்தைகளும் இதன் மூலம் பயன் பெறுவர்.

இவ்வாறு சமூக நலத்துறை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியாவில் ஒரே நாளில்

# 1272 பேருக்கு கொரோனா தொற்று!

புதுடெல்லி, மே 18-

இந்தியாவில் கொரோனா தொற்றால் புதிதாக 1,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய சுகாதாரத்துறை நேற்று காலை வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது. கடந்த 14ந்தேதி பாதிப்பு 1,272 ஆக இருந்தது. திங்கட்கிழமை 801, செவ்வாய்க்கிழமை 656 ஆக குறைந்த நிலையில் நேற்று (புதன்கிழமை) மீண்டும் ஆயிரத்தை தாண்டி உள்ளது.

இதுவரை தொற்றுக்கு பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 49 லட்சத்து 83 ஆயிரத்து 152 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று பாதிப்பில் இருந்து 2,661 பேர் உள்பட இதுவரை 4 கோடியே 44 லட்சத்து 39 ஆயிரத்து 965 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது 11,393 பேர் தொற்றுக்கு சிகிச்சை பெற்று வருகிறார்கள். கொரோனா பாதிப்பால் நேற்று முன்தினம் டெல்லி, குஜராத்தில் தலா ஒருவர் மற்றும் கேரளாவில் விடுபட்ட 2 மரணங்கள் என மேலும் 4 பேர் இறந்துள்ளனர். மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்து 31 ஆயிரத்து 794 ஆக உயர்ந்துள்ளது.

### மின்னணு முறையில்

# சந்தைப்படுத்தல் குறித்த இணையவழி கருத்தரங்கம்!

சென்னை, மே.18-

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை, மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் குறித்த இணையவழி கருத்தரங்கம் வரும் 20.05.2023 (காலை 10.30 மணி முதல் மதியம் 5.30 மணி வரை) வழங்க உள்ளது.

இப்பயிற்சியில் மின்னணு முறையில் சந்தைப் படுத்தல் மின்னணு முறையின் நுட்பங்கள் இணைய தளத்தை உருவாக்குதல் டொமைன் பெயர் உருவாக்குதல் & ஹோஸ்டிங் இணையதள வடிவமைப்பு நுட்பங்கள் மற்றும் விதிகள், மின்னணு முறையில் சந்தைப்படுத்தல் நன்மைகளை விளக்குதல்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

**முன்பதிவு அவசியம்:**

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை- 600032. 7418304939. 9677152265, 8668102600,

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை நந்தனத்தில், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் (16.05.2023), "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் என்னும் புதிய திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி சேவைக்காக இரண்டாம் கட்டமாக 15 அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு ரூ. 1,14,53,501/- (ஒரு கோடியே பதினான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து ஐநூற்று ஒன்று மட்டும்) நிதியினை காசோலையாக வழங்கினார். கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம், மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப்பணிகள் இயக்குநர் திருமதி.எம் லட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

### எழும்பூர் வடக்குப் பகுதி

# 77 'அ' வட்டக்கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் வி. அபாய் வேண்டுகோள்!


சென்னை, மே 18-

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்குப் பகுதி 77 (அ) வட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் இன்று (18.5.2023 வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் தஷ்ணாமூர்த்தி திருமண மாளிகை டிலம்ஸ் சாலை, சென்னையில் நடைபெறுகிறது என வட்டச் செயலாளர் வி.அபாய் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்து விவாதிக்கப்படுகிறது.

சொ.வேலு எழும்பூர் வடக்கு பகுதிச் செயலாளர் சென்னை மாநகராட்சி நியமனக் குழு உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் எம்.சி., எழும்பூர் தொகுதி சட்டமன்ற பொறுப்பாளர் தகவல் தொழில்நுட்ப மகளிர் அணி தலைவர் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள். மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் பி.எல்.ஏ.-2 மற்றும் முன்னாள் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அனைத்து உடன்பிறப்புகள், செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


இவ்வாறு வட்டச் செயலாளர் வி.அபாய் கேட்டுக்கொண்டுள்ளார்.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தி.சு. நல்லதம்பி

### மே 18 (2007)



கழகம் தோன்றிய காலத்திலிருந்து கழக உறுப்பினர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1959ஆம் ஆண்டு சென்னை, எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தளபதியாக சிறப்புற பணியாற்றியவர்.

1959 முதல் 1974ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1977ல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பூங்கா நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முல்லை வடிவேல்

### மே 18 (1999)



கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து உறுப்பினர். செயற்குழு – பொதுக்குழு உறுப்பினராக இருந்தவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பு வகித்தவர். ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து பதினாறு ஆண்டுகள் அப்பொறுப்பு வகித்தவர்.

வேலூர் கூட்டுறவு வங்கியின் தலைவராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, கருப்புக் கொடி, விலைவாசி உள்ளிட்ட அறப்போராட்ங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**